# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2116 - 2019 මාර්තු මස 22 වැනි සිකුරාදා - 2019.03.22

*2116 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 734 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 759 |


**கவனிக்க**.- கம்பனிகள் (திருத்தம்) சட்டமூலம் 2019, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, மாச்சு மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


*731-B 81506-5,403 (2019/03)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலூவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலூவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லூப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலூம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லூமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லூமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லூத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லூத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லூவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லூ விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலூல் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி - திருகோணமலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் அதிகபட்ச வயது 65 ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக் கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, ஏப்பிறல் 22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, பெப்புருவரி 27.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| திருகோணமலை | குச்சவெளி | குச்சவெளி பிரிவின் மேலதிக விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை |
| திருகோணமலை | மூதூர் | தோப்பூர் பிரிவின் மேலதிக விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை |

3-914

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தமிழ் மொழி மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பதிவாளர் பதவி - மட்டக்களப்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்கு குறையாதவர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, ஏப்பிறல் 22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, பெப்புருவரி 27.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மட்டக்களப்பு | ஏறாவூர் பற்று | ஆறுமுகத்தான் குடியிருப்பு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஏறாவூர் கோரளைப்பற்று பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மட்டக்களப்பு |
| மட்டக்களப்பு | மண் முனைப் பற்று (ஆரையம்பதி) | ஆரையம்பதி பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மண்முனைப்பற்று பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மட்டக்களப்பு |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| மட்டக்களப்பு | ஏறாவூர் பற்று | றூகம் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஏறாவூர் பற்று பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மட்டக்களப்பு |

3-915

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர்
பதவி - திருகோணமலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, ஏப்பிறல் 22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, பெப்புருவரி 27.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| திருகோணமலை | மூதூர் | கொட்டியார் தெற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், திருகோணமலை |

3-916

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, ஏப்பிறல் 22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, பெப்புருவரி 28.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | கஹட்டகஸ்திகிலிய | வடக்கு உட்டியன்குளம் கோறளை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹூருலு பலாத்த பிரிவின் விவாக (கண்டிய /பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |

3-917

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் அதிகபட்ச வயது 65 ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக் கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, ஏப்பிறல் 22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, பெப்புருவரி 28.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | கெக்கிராவை | கலாகம பலாத்த பிரிவின் மடாட்டுகம பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், அநுராதபுரம் |

3-918

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் அதிகபட்ச வயது 65 ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக் கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, ஏப்பிறல் 22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, மாச்சு 01.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | இப்பாகமுவ | ஹிரியால ஹத்பற்று பிரிவின் மெல்சிறிபுர பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |
| குருநாகல் | இப்பாகமுவ | ஹிரியால ஹத்பற்று பிரிவின் இப்பாகமுவ பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |

*3-919*

---

## இலங்கைப் பொலிஸ்

பொலிஸ் கொஸ்தாபல் பதவி

இலங்கைப் பொலிஸ் சேவையில் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி ஆட்சேர்ப்புக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2019.05.22 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பிவைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்** : ரூபா 3,54,480.00 - 7 ×3,600 - 27 x 4,440 - ரூபா 4,99,560.00

2016.01.01 ஆந் திகதி முதல் 2020.01.01 ஆந் திகதிவரை சம்பளம் பொது நிர்வாக சுற்றுநிருபம் இலக்கம் 3-2016 இன் அட்டவணை II இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் 2020.01.01 முதல் முழுமையான சம்பள அளவுத் திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்களாவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதந்தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர் :-

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : ரூபா 7,800.00;

(ஆ) பொ. நி. சு. இல. 03/2016 இற்கு அமைய அடிப்படைச் சம்பளத்தில் 40% கொடுப்பனவாகக் குறிப்பிடப்பட்ட பதவிக்கு வழங்கப்படும் : ரூபா 10,595.00

(இ) கடினக் கொடுப்பனவு : ரூபா 2,000.00

(ஈ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு ; ரூபா 250.00;

(உ) இணைந்த கொடுப்பனவுகள் : ரூபா 10,500.00 (350 x 30 விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்) ;

(ஊ) இணைந்த கொடுப்பனவுகள் : ரூபா 8,400.00 (350 x 24 விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்) ;

**இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :**

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடுகளிலும் வைத்திய சிகிச்சைகளை பெறுவதற்கு நிதி மூலமான உதவித் தொகைகளைப் பெற்றுக் கொள்ளவதன் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும்) ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வசதிகள் வழங்கப்படும்;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும் ;

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) **வயதெல்லை.**- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே இலங்கைப் பொலிஸில் சேவையாற்றும் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்ப முடிவுத் திகதியன்று 30 வயதிற்கு உட்பட்டவர்களாக இருந்தால் அவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

(ஆ) **கல்வித் தகைமைகள்.**- க.பொ.த. (சா. தரப்) பரீட்சையில் கணிதம்/ தாய்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் கணிதம்/தாய்மொழி இரண்டு பாடங்களில் அல்லது ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா. தரப்) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.**- க.பொ. த. (சா. தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படுவார்.

**குறிப்பு 3.**- விருப்பத்திற்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தரப்) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) **பௌதீகத் தகைமைகள் :**

* **உயரம் :** 5 அடி 4 அங்குலம் (ஆகக் குறைந்தது)
* **மார்பு :** 30 அங்குலம் (ஆகக் குறைந்தது மூச்சுவிட்ட நிலையில்)

**குறிப்பு 1.**- சிறந்த விளையாட்டுத் திறமையுடன் தேசிய விளையாட்டு குழாத்திலிருந்துதேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதீக தகைமைகள் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி அடிப்படை தகைமையை பெறுவார்.

(ஈ) **பார்வை தொடர்பான தேவை.**- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/ 6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் சேவைக்கு தகைமை அற்றவராவார்.

(உ) **பிற தகைமைகள்.**- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்து பெற்றவர்கள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்). மற்றைய தகைமைகள் உடைய ஏற்கனவே இலங்கை பொலிஸில் சேவையாற்றும் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிக்கு இந்நிபந்தனை மாத்திரம் ஏற்புடையதாகாது.

5. **ஆட்சேர்ப்பு முறை:**- விண்ணப்பங்களின்படி தகைமையைப் பெறும் விண்ணப்பதாரிகள் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் தன்னம்பிக்கையை சோதிப்பதற்கான பரீட்சை ஆரம்ப சக்தி மற்றும் பிரதி பலிப்பு சம்பந்தமான பரீட்சைகளில் பங்குபற்றி அதிலும் சித்தியெய்துதல் வேண்டும்.-

* உடற்தகுதிப் பரீட்சை :

1000 மீற்றர் ஓட்டம் - 03 நிமிடம் 44 வினாடி

* உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இந்நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் :

  எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது; அவை :

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக கட்டுரை எழுதுதல்.
* பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சைக் காலம் (1 மணித்தியாலம்)

6. **மருத்துவப் பரிசோதனை :**

விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலின்படி தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.மருத்துவப் பரிசோதனை பிரதான மருத்துவ உத்தியோகத்தரினால் உடநலம் இல. 169 படிவத்திற்கமைய அறிக்கை தயாரிக்கப்படும் என்பதுடன் மருத்துவப் பரிசோதனை ஒரே தடவையில் நடைபெறும்.

7. **பின்னணி விசாரணைகள்.-** (அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். பின்னணி விசாரணைகளில் ஏதேனும் பாதகமான காரணிகள் இருந்தால் அவ்விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அல்லது மூடி மறைப்பது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

8. **அரச கரும மொழிக் கொள்கையை அமுல்படுத்துதல் :**

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரசாங்க சேவைக்கு/மாகாண அரசாங்க சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.
- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.
- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் உரிய இரண்டாம் மொழியில் தேர்ச்சியடையாதவர்கள் குறித்த மொழியில் தேர்ச்சி அடையும் வரை சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

9. **நியமன நியதிகள்.-** இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்.-** (அ) நியமனம் 3 ஆண்டு காலம் பயிலுநர் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் விதிக்கப்படும் விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபன விதிக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளிலான ஏற்பாடுகளுக்கும், நிதி ஒழுங்கு விதிகள், பொலிஸ் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்படல் வேண்டும்.

(ஈ) பதவி நிரந்தரமாவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியெய்தல் வேண்டும். குறித்த பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

(உ) நியமனம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் நிரந்தரமாக்கும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்க பொலிஸ் வர்த்தமானி II இன் பிரகாரம் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய 1952/2006ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்தின் பிரகாரமும் மற்றும் 2007.08.09 ஆந் திகதிய அச்சுற்றுநிருபத்தின் திருத்தத்தின் பிரகாரமும் பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் விசேட காரணங்களைக் காட்டி திருமணம் செய்ய இயலும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட பயிலுநர் நிலையில் இலங்கைப் பொலிஸில் பணியாற்ற வேண்டியதுடன் இப்பயிலுநர் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதியானது இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்ளலானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக, 1693/2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்றுக் கோவையினை பின்பற்றுவதாக சத்தியப் பிரமாணம்/உறுதி செய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அபிமானம் மிக்க அரச சேவைக்கான அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சுய உறுதி செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் தமது பதவி நிரந்தரமான பின்னர் இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இல் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட அரச சேவை பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய பொது நிபந்தனைகள் செல்லுபடியாகும்.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய மற்றும் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குண நலச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய புறக்கிருத்தி செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின் மாத்திரம்) ;

(ஊ) தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி ;

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற ஒரு சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்களை நேரடியாகக் கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ இலங்கைப் பொலிஸினால் வழங்கப்பட மாட்டாது.

பூஜித் ஜயசுந்தர,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01,

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ் திணைக்களம்**

**பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி**

(அலுவலக உபயோகத்திற்கு)
அளவு 2" x 2 1/2"

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ள படியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.
(தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பிரதேச செயலகப் பிரிவு-----.
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(உ) கடிதம் அனுப்பும் முகவரி :----.
(ஊ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு: ------/பிரதேச செயலகம் :-----.
(எ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----, கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின், பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பாட்டன் : -----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----. மார்பு : (அங்குலம்) : -----:

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? : -----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர், முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ) -----.
(ஆ) -----.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ?
(ஆம் எனின், அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக) :-----.
பதவி மற்றும் வழங்கப்பட்ட இலக்கம் :-----.

16. (அ) நீங்கள் ஆயுதப்படைச் சேவையில் இருக்கிறீர்களா? அவ்வாறாயின், குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப் படைச் சேவையில் இருந்துள்ளீர்களா? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீர்களா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீர்களா ? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? அவ்வாறாயின், விபரம் தருக. :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் குற்றம் சம்பந்தப்பட்ட அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின், ஏதேனும் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின், விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் இலங்கை பொலிஸ் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் இலங்கைப் பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :
இந்த விண்ணப்பதாரி ........................................ அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் தெரிவிக்கிறேன்.

.................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை இடப்படல் வேண்டும்).

பதவி :-----.
திகதி :-----.

3-1111/1

---

## இலங்கைப் பொலிஸ்

பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி

இலங்கை பொலிஸ் சேவையில் பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி ஆட்சேர்ப்புக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2019.05.22 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பிவைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 3,54,480.00 - 7 ×3,600 - 27 x 4,440 - ரூபா 4,99,560.00

2016.01.01 ஆந் திகதி முதல் 2020.01.01 ஆந் திகதி வரை சம்பளம் பொது நிர்வாக சுற்றுநிருபம் இலக்கம் 3-2016 இன் அட்டவணை II இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் 2020.01.01 முதல் முழுமையான சம்பள அளவுத் திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

* மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்களாவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதந்தோறும் பெறுவதற்கும் உரித்துடைய வராவர் :-

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : 7,800 ரூபா ;
(ஆ) பொ. நி. சு. இல. 03/2016 இற்கு அமைய அடிப்படைச் சம்பளத்தில் 40% கொடுப்பனவாகக் குறிப்பிடப்பட்ட பதவிக்கு வழங்கப்படும் : 10,595 ரூபா
(இ) கடினக் கொடுப்பனவு : 2,000 ரூபா
(ஈ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு 250 ரூபா ;
(உ) இணைந்த கொடுப்பனவுகள் : 10,500 ரூபா (350 x 30 விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்) ;
(ஊ) இணைந்த கொடுப்பனவுகள் : 8,400 ரூபா (350 x 24 விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்) ;

**இந்த கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :**

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;
(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டு நிதி உதவிகள் வழங்கப்படும்) ;
(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;
(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான உதவிகள் வழங்கப்படும்;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கஷ்டப் பிரதேசங்களில் சேவையாற்றுவதற்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும் ;

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) **வயதெல்லை.**- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்வித் தகைமைகள்.**- க.பொ.த. (சா. தர) பரீட்சையில் கணிதம்/ தாய்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் கணிதம்/தாய்மொழி இரண்டு பாடங்களில் அல்லது ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞானப் பாட இலக்கங்கள் 41, 44 ஒரு பாடமாகவும், இல. 42 மற்றும் 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும்.

**குறிப்பு 2.**- க.பொ. த. (சா. தரப்) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்பப் பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படும்.

**குறிப்பு 3.**- விருப்பத்திற்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தரப்) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தரப்) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) **பௌதீகத் தகைமைகள் :**

* **உயரம் :** 5 அடி, 2 அங்குலம் (ஆகக் குறைந்தது)

**குறிப்பு** - சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உடல் தகுதித் தேவைப்பாடுகள் குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைப்படி தகைமை பெறுவர்.

(ஈ) **பார்வை தொடர்பான தேவைப்பாடு.**- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்றைய கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) **பிற தகைமைகள்.**- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்).

5. **ஆட்சேர்ப்பு முறை.**- விண்ணப்பங்களின்படி தகைமையைப் பெறும் விண்ணப்பதாரிகள் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் பங்குபற்றி அதிலும் சித்தியெய்துதல் வேண்டும்.-

* உடற்தகுதிப் பரீட்சை :

1000 மீற்றர் ஓட்டம் - 05 நிமிடம் 14 வினாடிகள்

* உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இந்நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்:

இவ் எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக கட்டுரை எழுதுதல்.

* பொது அறிவும் நுண்ணறிவுப் பரீட்சைக் காலம் (1 மணித்தியாலம்)

6. **மருத்துவப் பரிசோதனை :**

விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவப் பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலின்படி தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.மருத்துவப் பரிசோதனை பிரதான மருத்துவ உத்தியோகத்தரினால் உடநலம் இல. 169 படிவத்திற்கமைய அறிக்கை தயாரிக்கப்படும் என்பதுடன் மருத்துவப் பரிசோதனை ஒரே தடவையில் நடைபெறும்.

7. **பின்னணி விசாரணைகள்.-** (அ) விண்ணப்பதாரியின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். பின்னணி விசாரணைகளில் ஏதேனும் பாதகமான காரணிகள் இருந்தால் அவ்விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அல்லது மூடி மறைப்பது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

8. **அரச கரும மொழிக் கொள்கையை அமுல் படுத்துதல் :**

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.01.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்பட்ட அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கரும மொழியில் சித்தியடையாதவர்கள் குறித்த மொழியில் தேர்ச்சி அடையும் வரை சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

9. **பதவியிலமர்த்தும் நியதிகள்.-** இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். நீங்கள் விதவைகள்/தபுதாரர்/ மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்.-**

(அ) நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் காலத்தை அடிப்படையாகக் கொண்டது.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபன விதிக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளிலான ஏற்பாடுகளுக்கும், நிதி ஒழுங்கு விதிகள், பொலிஸ் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவர்கள் ஆவார்கள்.

(ஈ) பதவி நிரந்தரமாவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியெய்தல் வேண்டும். குறித்த பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்கள்.

(உ) நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் நிரந்தரமாக்கும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்க பொலிஸ் வர்த்தமானி II இன் பிரகாரம் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய 1952/2006ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபம் மற்றும் 2007.08.09ஆந் திகதிய அச்சுற்றுநிருபத்தின் திருத்தத்தின் பிரகாரம் பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் விசேட காரணங்களைக் காட்டி திருமணம் செய்ய இயலும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் கால நிலையில் இலங்கைப் பொலிஸ் சேவையில் பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் காலம் வரை அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதியானது இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்வதை 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக, 1693/2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்றுக் கோவையினை பின்பற்றுவதாக பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஏ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சியை ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியப்பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஒ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி நிரந்தரமான பின்னர் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு வாய்ப்புண்டு.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இல் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குண நலச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்திற்கு புறம்பாகப் பெற்ற சான்றிதழ்கள் ;

(உ) சேவையில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;

(ஊ) தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி ;

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் இச்சான்றிதழ் இல்லாமல் விண்ணப்பம் அனுப்பினால் அது நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்தக் கையெழுத்தில் வேண்டப்பட்ட விபரங்களைப் பூரணப்படுத்தி சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்களை நேரடியாகக் கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பூஜித் ஜயசுந்தர,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01,

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ் திணைக்களம்**

பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி

(அலுவலக உபயோகத்திற்கு)
அளவு 2" x 2 1/2"

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ள படியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.
(தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(உ) கடிதம் அனுப்பும் முகவரி :----.
(ஊ) நிரந்தர முகவரிக்குரிய பிரதேச செயலாளர் பிரிவு/கிராம அலுவலர் பிரிவு :-----.
(எ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----, கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.

(3) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பாட்டன் : -----.

(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? : -----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர், முகவரிகளைக் குறிப்பிடுக :-
(அ) -----.
(ஆ) -----.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? :-----.

பதவி மற்றும் வழங்கப்பட்ட இலக்கம் :-----.
ஆம் எனின், அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக :-----.

16. (அ) நீங்கள் ஆயுதப்படைச் சேவையில் இருக்கிறீர்களா? அவ்வாறாயின், குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்:-----.

(ஆ) நீங்கள் ஆயுதப் படைச்சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட ஆயுதப்படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? அவ்வாறாயின், விபரம் தருக. :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் குற்றம் சம்பந்தப்பட்ட சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின், ஏதேனும் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள் ளதா ? அவ்வாறாயின், விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவை யென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் இலங்கைப் பொலிஸ் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் இலங்கைப் பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. நிறுவனத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :
இந்த விண்ணப்பதாரி ....................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் தெரிவிக்கிறேன்.

.................,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை இடப்படல் வேண்டும்).

பதவி :-----.
திகதி :-----.

3-1111/2

---

## இலங்கைப் பொலிஸ்

### பொலிஸ் கொஸ்தாபல் சாரதிப் பதவி

இலங்கைப் பொலிஸ் சேவையில் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2019.05.22 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பிவைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 3,54,480.00 - 7 ×3,600 - 27 x 4,440 - ரூபா 4,99,560.00

2016.01.01 ஆந் திகதி முதல் 2020.01.01 ஆந் திகதி வரை சம்பளம் பொது நிர்வாக சுற்று நிருபம் இலக்கம் 3-2016 இன் அட்டவணை II இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் 2020.01.01 முதல் முழுமையான சம்பள அளவுத் திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

* மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்று நிருப இலக்கம் 2416/2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்களாவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதந்தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர் :-

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : ரூபா 7,800.00 ;

(ஆ) பொ. நி. சு. இல. 03/2016 இற்கு அமைய அடிப்படைச் சம்பளத்தில் 40% கொடுப்பனவாகக் குறிப்பிடப்பட்ட பதவிக்கு வழங்கப்படும் : ரூபா 10,595.00

(இ) கடினக் கொடுப்பனவு : 2,000.00 ரூபா

(ஈ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு 250ரூபா ;

(உ) இணைந்த கொடுப்பனவுகள் : 10,500 ரூபா (350 X 30 விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்) ;

(ஊ) இணைந்த கொடுப்பனவுகள் : 8,400 ரூபா (350 X 24 விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்) ;

**இந்த கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :**

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடாக இருப்பினும் வைத்திய வசதிகள் பொருட்டு பண உதவிகள் வழங்கப்படும்) ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வசதிகள் வழங்கப்படும்;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும் ;

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) **வயதெல்லை:** வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 19-29 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்வித் தகைமைகள்:** க.பொ.த. (சா. தரப்) பரீட்சையில் கணிதம்/ தாய்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் கணிதம்/தாய்மொழி இரண்டு பாடங்களில் அல்லது ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

**குறிப்பு 1.-** இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும் போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க.பொ.த. (சா.தரப்) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.-** க.பொ. த. (சா. தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படும்.

**குறிப்பு 3.-** விருப்பத்திற்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்படமாட்டாது.

(இ) **பௌதீகத் தகைமைகள் :**

* **உயரம் :** 5 அடி 3 அங்குலம் (ஆகக் குறைந்தது)
* **மார்பு :** 30 அங்குலம் (ஆகக் குறைந்தது மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு 1.-** சிறந்த விளையாட்டுத் திறமையுடன் தேசிய விளையாட்டுக் குழாத்திலிருந்து தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதீக தகைமைகள் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி அடிப்படைத் தகைமை பெறுவர்.

(ஈ) **தொழில் தகைமைகள்:**

(1) இலகு வாகனங்களை அல்லது கனரக வாகனங்களை ஓட்டும் திறமை இருப்பதற்கான சான்றிதழ் இருத்தல்.

(2) மேற்குறிப்பிட்ட சான்றிதழை பெற்ற பின் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு மோட்டார் வாகனம் செலுத்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** : வாகனம் சம்பந்தமாக தொழில்நுட்ப அறிவு, வாகனம் திருத்திய அனுபவம் அத்துடன் நெடுங்காலமாக வாகனம் செலுத்திய அனுபவம் இருந்தால் அவ்விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

* வாகனத்தைத் திறமையாகச் செலுத்துவதற்கு தேவைப்படும் உடல் அவயங்களில் இயக்கத்திற்கு தடையாக இருக்கும் ஏதாவது அங்கவீன அல்லது பிற உடல் குறைபாடுகளை உடைய விண்ணப்பதாரர் சேவைக்கு பொருத்தமானவர் எனும் வைத்திசாலை சான்றிதழ் பெற்றிருப்பினும் அவர் இப்பதவிக்கு தகுதியற்றவராகக் கருதப்படுவர்.

* அடிப்படைத் தகைமைகளை கொண்ட விண்ணப்பதாரர் வாகனம் செலுத்துவது மற்றும் பராமரிப்பு தொடர்பில் பரீட்சிக்கப்படுவர். அது போலவே வீதிகள் போக்குவரத்து சைகைகள் தொடர்பாக விண்ணப்பதாரர் பெற்றுள்ள அறிவு ஒவ்வொரு விண்ணப்பதாரரும் வாகனம் செலுத்துவதற்கு திறமை பெற்றுள்ள வாகனங்களும் இயந்திர தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை அறிவு ஆகியனவும் பரீட்சிக்கப்படும்.

(உ) **பார்வை தொடர்பான தேவை**: ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/ 6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் சேவைக்கு தகைமை அற்றவராவார்.

(ஊ) **பிற தகைமைகள்**.- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்து பெற்றவர்கள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்).

5. **ஆட்சேர்ப்பு முறை**.- விண்ணப்பங்களின்படி தகைமையைப் பெறும் விண்ணப்பதாரிகள் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் பங்குபற்றி அதிலும் சித்தியெய்துதல் வேண்டும்.-

* உடற்தகுதிப் பரீட்சை :

1000 மீற்றர் ஓட்டம் - 03 நிமிடம் 44 வினாடி

* உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்:

6. **தொழில்சார் பரீட்சை**: பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி.-

6.1 இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரின் பணிப்புரையின் கீழ் பொலிஸ் சாரதி பாடசாலையின் உதவி பணிப்பாளரினால் தொழிசார் பரீட்சை நடாத்தப்படும்.

6.2 தொழில்சார் பரீட்சைக்கு 100 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது தொழில்சார் பரீட்சை பின்வருமாறு நடாத்தப்படும் -

(அ) வாகனம் செலுத்தும் தகுதி - 50 புள்ளிகள்

(ஆ) வீதிச் சட்ட அறிவுரை - 25 புள்ளிகள்

(இ) வாகனப் பராமரிப்பு மற்றும் சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவு - 25 புள்ளிகள்

6.3 **தொழில்சார் பரீட்சை** : வாகனம் செலுத்தும் தகுதிப்பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 50 புள்ளிகளில் ஆகக் குறைந்தது 25 புள்ளிகளுக்கு வீதிச்சட்ட அறிவுரைப் புத்தகம் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகள்ஆகக் குறைந்தது 12.5 புள்ளிகளும் , வாகனப் பராமரிப்பும் சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக் குறைந்தது 12.5 புள்ளிகளாவது பெற்று முழுப் புள்ளிகள் 100 இல் ஆகக் குறைந்தது 50 புள்ளிகளாவது பெறும் விண்ணப்பதாரர்கள் தொழில்சார் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக கருதப்பட்டு மருத்துவப் பரிசோதனைக்கு அழைக்கப்படுவர்.

**குறிப்பு**: சேர்க்கப்பட்ட பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பயிலுநர் காலப்பகுதிக்குள் கனரக வாகனங்களை ஓட்டுவதற்கான தகைமையைப் பெற பொலிஸ் வித்தியாலத்தில் நடைபெறும் கனரக வாகனம் ஓட்டும் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

7. **மருத்துவப் பரிசோதனை :**

* விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலின்படி தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.மருத்துவப் பரிசோதனை பிரதான மருத்துவ உத்தியோகத்தரினால் உடநலம் இல. 169 படிவத்திற்கமைய அறிக்கை தயாரிக்கப்படும் என்பதுடன் மருத்துவப் பரிசோதனை ஒரே தடவையில் நடைபெறும்.

8. **பின்னணி விசாரணைகள்.**- (அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். பின்னணி விசாரணைகளில் ஏதேனும் பாதகமான காரணிகள் இருந்தால் அவ்விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அல்லது அதை மூடி மறைப்பது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

9. **அரச கரும மொழிக் கொள்கையை அமுல்படுத்துதல் :**

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் உரிய இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெறாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

10. **நியமனக் கொள்கைகள்.**- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

11. **சேவை நிபந்தனைகள்.**- (அ) நியமனம் 3 ஆண்டு கால பயிலுநர் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தவும் ஏற்கனவே விதிக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் விதிக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபன விதிக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், பொலிஸ் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்படல் வேண்டும்.

(ஈ) பதவி நிரந்தரமாவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியெய்தல் வேண்டும். குறித்த பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்கள்.

(உ) நியமனம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் நிரந்தரமாக்கும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்க பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II இன் பிரகாரம் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய 1952/2006ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்தின் பிரகாரமும் 2007.08.09 ஆந் திகதி திருத்தம் செய்யப்பட்ட அச்சுற்று நிருபத்தின் பிரகாரமும் பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் விசேட காரணங்களைக் காட்டி திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட பயிலுநர் நிலையில் இலங்கைப் பொலிஸ் சேவையில் பணியாற்ற வேண்டியதுடன் இப்பயிலுநர் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதியானது இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்ளலானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக, 1693/2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றிக்கையின் பிரகாரம் பொலிஸ் ஒழுக்காற்றுக் கோவையினைப் பின்பற்றுவதாக சத்தியப் பிரமாணம்/உறுதி செய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் சாரதிகள் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சியை ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அபிமானம் மிக்க அரச சேவைக்கான அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சுய உறுதி செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் தமது பதவியில் உறுதிப்படுத்திய பின் இலங்கைப் பொலிஸில் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையராவர்.

12. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) ஆம் பந்தியின் ஆரம்பத்தில் குறிப்பிடும் குறிப்பிடப்பட்டுள்ள அரச சேவை பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய ஏற்புடைய பொது நிபந்தனைகள் செல்லுபடியாகும்.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய மற்றும் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

13. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குண நலச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய புறக்கிருத்தி செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின் மாத்திரம்) ;

(ஊ) தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி ;

(எ) சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதி.

14. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர் களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்களை நேரடியாகக் கையளித்தலாகாது.

15. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ இலங்கைப் பொலிசினால் வழங்கப்பட மாட்டாது.

பூஜித் ஜயசுந்தர,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01,
2019, மாச்சு 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ்**

பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிப் பதவி

(அலுவலக உபயோகத்திற்கு) அளவு 2" x 2 1/2"

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ள படியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.
(தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.
பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) கடிதம் அனுப்பும் முகவரி :----.

(ஊ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :------. பிரதேச செயலகம் :-----.

(எ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----, கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பாட்டன் : -----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----. மார்பு : அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. (அ) வானம் ஓட்டும் அனுமதிப்பத்திர இலக்கம் ----.
(ஆ) வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரம் பெற்ற திகதி .----.
(இ) திறமை பெற்ற வாகனங்களின் வகுப்புகள் -----.
(சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)

11. மேலதிகத் தகைமைகள் உண்டா ?( சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)----.

12. திருமணம் ஆனவரா?/திருமணம் ஆகாதவரா ? :-----.

13. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? : -----.

14. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

15. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர், முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ) -----.
(ஆ) -----.

16. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ?
பதவி மற்றும் வழங்கப்பட்ட இலக்கம் :-----.
(ஆம் எனின், அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக) :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப்படைச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப் படைச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

18. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? :-----.
அவ்வாறாயின், குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

19. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? அவ்வாறாயின், விபரம் தருக. :----.

20. உங்கள் உறவினர்கள் எவரேனும் குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின், ஏதேனும் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா? அல்லது குற்றத்துக்குத் தண்டனை வழங்கப்பட் டுள்ளதா? அவ்வாறாயின், விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் இலங்கைப் பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கைப் பொலிஸ் திணைக்கள சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

*21.* நிறுவனத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ....................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் தெரிவிக்கிறேன்.

.................,
(நிறுவனத் தலைவரின் கையொப்பம்.)
(பதவி முத்திரை இடப்படல் வேண்டும்).

பதவி :-----.
திகதி :-----.

*3-1111/3*

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை – 2018 (2019)

தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின்கீழ் நிலவும் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவில் பணியாற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்களின் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை இந்த அமைச்சு சார்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2019, யூன் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். கீழ் குறிப்பிடப்படும் அறிவித்தலுக்கமைய அதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**02. பரீட்சை நடைமுறை**

(அ) இப்பரீட்சை 03 வினாத்தாள்களைக் கொண்டதாக இருப்பதுடன் ஒவ்வொரு வினாத்தாளுக்குமான பாட விதானம் இலக்கம் 03 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) பாட இலக்கம் 01 முதல் 03 வரை ஒவ்வொரு பாடத்திற்கும் 100 புள்ளிகள் வீதம் வழங்கப்படுவதுடன், ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்காக குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) இப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(ஈ) ஆங்கில மொழிக்குரிய எழுத்து மூலப் பரீட்சையின் 75 புள்ளிகளில் 30 புள்ளிகளும் வாய் மூலப் பரீட்சையின் 25 புள்ளிகளில் 10 புள்ளிகளும் பெற்றுக்கொள்ளுதல் அவசியமாகும்.

(உ) இப் பரீட்சைக்குரிய மூன்று (03) வினாத்தாள்களுக்கும் ஒரே தடவையில் அல்லது பல தடவைகளில் தோற்றி சித்தியடைய முடியும். ஒரு தடவையில் ஆங்கில எழுத்து மூலப் பரீட்சை அல்லது வாய் மூலப் பரீட்சைகளில் ஒரு பரீட்சையில் சித்தியடையாத பட்சத்தில் அந்த சித்தியடையாத பாடத்திற்கு மாத்திரம் அடுத்த முறை விண்ணப்பிக்க முடியும்.

(ஊ) **பரீட்சைக் கட்டணம்:**
முதலாவது தடவையாக முழுப் பரீட்சைக்கு அல்லது ஒரு பகுதிக்கு மாத்திரம் தோற்றும்போது பரீட்சைக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படும். முதலாவது தடவை அல்லாதவிடத்து கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் பரீட்சைக் கட்டணம் அறவிடப்படும்.

| | |
|---|---|
| முழுப் பரீட்சைக்கு | ரூ.500.00 |
| ஒரு பாடத்திற்கு | ரூ.200.00 |

பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13இற்கு வரவு வைக்கப்பட்டு நாட்டின் எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திற்கு / உப அஞ்சல் அலுவலகத்திற்கு அல்லது மாவட்ட / பிரதேச செயலகத்திற்கு பணமாகச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டை அதன் ஒரு ஓரம் மாத்திரம் ஒட்டப்படும் வகையில் விண்ணப்பப் படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லையென்பதுடன், எக்காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணங்கள் மீளளிக்கப் படவோ அல்லது வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

**03. வினாத்தாள் மற்றும் அவற்றுக்கான பாடவிதானம் :-**

***முதலாவது வினாத்தாள் (காலம் 03 மணித்தியாலம்)***

(1) நிதிப் பிரமாணங்கள்- ( பாட இலக்கம் - 01 )

i. திரட்டு நிதியம்
ii. வரவு செலவுத் திட்ட (பாதீட்டு) வகைப்படுத்தல் பிரிவு
iii. மீண்டெழும் செலவினம் / மூலதனச் செலவினம்
iv. வீரமொங் நடைமுறை
v. பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் மேற்பார்வை
vi. கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் அரச வருமானம் சம்பந்தமான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள்
vii. பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கள்
viii. அரச வருமானம் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள்
ix. திறைசேரி மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு
x. திணைக்களமொன்று என்ற வகையில் திறைசேரியின் நிறைவேற்று அலுவல்கள்
xi. உள்ளகக் கணக்காய்வு
xii. நிதிக் கட்டுப்பாடு சம்பந்தமான அலுவல்களை ஒப்படைத்தல் (அ.செலவு ஆ.வருமானம்)
xiii. கணக்காய்வு வினவல்கள்
xiv. செலுத்துதல் நடைமுறை
xv. கணக்கெடுப்பு சபை
xvi. வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல் சம்பந்தமான நடைமுறைகள்

***இரண்டாவது வினாத்தாள் (காலம் 03 மணித்தியாலம்)***

(2) தாபன மற்றும் அலுவலக நடைமுறைகள் - (பாட இலக்கம் - 02)

தாபனக் கோவையின் I ஆவது பிரிவில் I, II, III, IV, VI, VII, VIII, XII, XIV, XV, XXII, XXIV, XXV, XXVII ஆம் அத்தியாயங்கள். மற்றும் II ஆவது பிரிவில் XLVII ஆம் அத்தியாயம். மற்றும் அலுவலக நடைமுறைகள் மற்றும் வெளிக்கள அமைப்பு நடைமுறைகள் சம்பந்தமான அறிவைப் பரீட்சிக்கும் வினாத்தாளாகும்.

***மூன்றாவது வினாத்தாள் (காலம் 03 மணித்தியாலம்)***

(3) ஆங்கிலம்- (பாட இலக்கம் - 03)

அ. எழுத்து மூலப் பரீட்சை[பாட இலக்கம் - 03 (I)]
ஆ. வாய் மூலப் பரீட்சை[பாட இலக்கம் - 03 (II)]

**(1) Content**
Written Examination (3 hours)

(a) Grammar: The following areas will be tested

(I) The Verb Forms of all Principal tenses of English eg. The Present Simple Tense, The Simple Past, The Present Perfect, etc.
(II) Nouns, Countable, Uncountable

(III) Pronouns
(IV) Adjectives Degrees of Comparison.
(V) Adverbs of Frequency, Word order, Phrases
(VI) Prepositions
(VII) Determiners
(VIII) Question words
(IX) Model Auxiliaries, Can, Could, May, Might, Should, Must, Ought.
(X) The Definite Article
(XI) Cardinals / Ordinals
(XII) The Passive Construction
(XIII) Relative Clauses
(XIV) If Clauses
(XV) Reported Speech
(XVI) There is / There are
(XVII) Have / Has

(b) Vocabulary tested will be that of General Modern English with special emphasis on the following field of Management Administration and Social and Economic Development

(c) Writing - Ability to write Essays, Department Reports, Official Letters
Oral Examination (15 minutes)

a. Speech
b. Listening Comprehension
c. Reading

**(2) Scheme of Examination**

(1) Written examination - There will be one paper of 3 hrs duration (75%Marks)

(2) Oral examination - 15 Minutes duration (25 % Marks)

**04.** ***விண்ணப்பிக்கும் முறை -***

(அ) *இந்த அறிவித்தலில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய விண்ணப்பப் படிவத்தை ஏ4(A4) அளவிலான தாளில் இரு பக்கத்தையும் பயன்படுத்தி தயாரித்துக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் இல. 1 முதல் 3 வரையிலான பகுதிகள் முதலாம் பக்கத்தில் உள்ளடங்கும் வகையிலும் மீதிப் பகுதிகள் இரண்டாம் பக்கத்தில் உள்ளடங்கும் வகையிலும் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். தமது கையெழுத்தினாலேயே அவற்றுக்கான தகவல்களை தெளிவாக பூரணப்படுத்தல் வேண்டும். விண்ணப்பமானது பரீட்சைக்கான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட வேண்டியிருப்பதுடன், அவ்வாறல்லாத விண்ணப்பங்கள் மற்றும் முழுமை பெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். (பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதியை வைத்திருத்தல் பயனுடையதாக இருக்கும்.)விண்ணப்பப்படிவத்தினை தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.*

(ஆ) *விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2019.04.22 ஆகும். உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தை திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத் தபாலில் 2019.04.22 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.*

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள்) கிளை

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

த.பெ. இல. 1503,

கொழும்பு.

(இ) விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழில் முயற்சிகள் அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்களின் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை2018(2019)" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் வெளியிடப்பட்டவுடன் உடனடியாக அது பற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் மற்றும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அறிவித்தல் விடுக்கப்படும். அறிவித்தல் விடுக்கப்பட்டு 02 அல்லது 03 நாட்கள் கடந்ததன் பின்னரும் தமது அனுமதிப் பத்திரங்கள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அது சம்பந்தமாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் (நிறுவன மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள்) கிளையுடன் தொடர்பு கொண்டு வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை தெளிவாக குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வாழ்பவராயின், குறிப்பிட்ட விபரங்களுடன் தொலைநகல் (பெக்ஸ்) ஊடாக பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் பிரதியொன்றை துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில் விண்ணப்பதாரியின் தொலைநகல் (பெக்ஸ்) இலக்கம் குறிப்பிடப்பட்ட கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல்(பெக்ஸ்) இலக்கத்திற்கு அனுப்பிவைத்தல் பொருத்தமானதாகும். (அவ்வாறு தொடர்பு கொண்டு வினவும்போது தேவையான போது முன்வைப்பதற்காக தங்களிடம் வைத்திருக்கும் விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய அந்தப் பற்றுச் சீட்டின் பிரதி மற்றும் பதிவுத் தபாலில் அனுப்பியதற்கான பற்றுச் சீட்டு என்பவற்றைத் தயாராக வைத்திருத்தல் மிகவும் பயன் தரக்கூடியதாக இருக்கும்.)

(உ) விண்ணப்பத்திலும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படும் உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

## 05. பரீட்சைக்குத் தோற்றுதல்

(அ) அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அத்தினத்திற்கு முன்னர், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டுமாயின் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம், விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தலுடன்சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்களை வெளியிடுவார். பரீட்சார்த்தியொருவர் தமக்கு குறித்துரைக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி, பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையொப்பம் உறுதி செய்யப்பட்ட தனது அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

**குறிப்பு:-**

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பெற்றுக்கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற முடிவின் அடிப்படையில் விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அத்தினத்திற்கு முன்னர், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்களை வெளியிடுவார்.பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டமையானது பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதக் கூடாது. பரீட்சையை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அந்தச் சட்ட ஒழுங்கு விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக வேண்டியேற்படும்.

(ஆ) பரீட்சார்த்திகளின்ஆளடையாளம் :- தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் சகல பரீட்சார்த்திகளும் தங்களது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆளடையாளத்தை நிரூபிக்கும் ஆவணங்களில் எவையேனும் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

i. தேசிய ஆள் அடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்

06. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் இருப்பின் அது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கே உண்டு.

07. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் அறிவித்தலில்மொழிப் பிரயோகங்களில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது பொருத்தமின்மை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கமைய அலுவல் மேற்கொள்ளப்படும்.

வீ.சிவஞானசோதி
செயலாளர்
தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்
குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண
அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும்
இளைஞர் அலுவல்கள் அமைச்சு.

இல. 15 /ஏ, அல்பிரட் பிளேஸ்
கொழும்பு 03,
2019, மாச்சு 12.

மாதிரி விண்ணப்பப் படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2018 (2019)**

**First Efficiency Bar Examination for Entrepreneurs Development Training Officers of the Small Enterprises Development Division of the Ministry of National Policies, Economic Affairs, Resettlement and Rehabilitation, Northern Province Development, Vocational Training & Skills Development and Youth Affairs– 2018(2019)**

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்:- ☐
சிங்களம் - 2 / தமிழ் - 3 (ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

01. பெயர்:
1.1 முதலெழுத்தை இறுதியிலிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர்:
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்):.........................................................................
(உதா.: GUNAWARDANA, M.G.B.S.K.)

1.2 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்): ..................................................

1.3 முழுப் பெயர் (தமிழில்):............................................................

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

02.

2.1 அலுவலக முகவரி:- ..............................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
(இந்த முகவரிக்கே பரீட்சை அனுமதிப்பத்திரம் தபாலில் இடப்படும் )

2.2 நிரந்தர முகவரி :- ..............................................................................
(தமிழில்)

2.3 ஆண் / பெண்
(பெண் - 1 ஆண் - 0)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

2.4 கையடக்கத் தொலைபேசி இல.:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

03. பரீட்சைக்குத் தோற்றும் பாடங்கள்

1 ............................................................. பாட இலக்கம்
2 ............................................................ பாட இலக்கம்
3 ............................................................. பாட இலக்கம்

04. பரீட்சைக்கு தோற்றிய தடவைகள்: .........................................

05. பரீட்சைக் கட்டணம்

i. செலுத்திய கட்டணம் : ரூ. ............ ii. செலுத்திய அலுவலகம் : ......................

iii. செலுத்திய திகதி : ........................ iv. பற்றுச் சீட்டு இல. : ......................

> வர்த்தமானி அறிவித்தலில் இல.02 (ஊ) பந்திக்கமைய, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தால் அந்த பற்றுச்சீட்டை இங்கு ஒட்டிவிடவும்.
> பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருத்தல் அத்தியாவசியமாகும்.

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையென உறுதிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு நான் உடன்படுகின்றேன் எனவும் இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

…...................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி : .......................................

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி...................................... எனதுமுன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும், அவரால் முன்வைக்கப்பட்டிருக்கும் தகவல்கள் சரியானவை எனவும், குறிப்பிட்ட வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகைமை பெற்றுள்ளார் எனவும்

அத்தாட்சிப்படுத்துகின்றேன். மேலும், அவர் முதன் முறையாக இந்தப் பரீட்சைக்குத் தோற்றுபவர் எனவும் /பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளார் எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

..............................................
திகதி :- . .................................................. திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :- ..................................................

பதவி :- ..................................................

முகவரி :- ..................................................
(தயவு செய்து பதவி முத்திரையை இடவும்).

3-1312/1

---

**தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2018 (2019)**

தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின்கீழ் நிலவும் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவில் பணியாற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்களின் இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை இந்த அமைச்சு சார்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2019, யூன் மாதம் கொழும்பில் நடாத்தப்படவுள்ளதனால் தகைமையைப் பெற்றுள்ள தொழில் முயற்சிகள் அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்களிடமிருந்துகீழ் குறிப்பிடப்படும் அறிவித்தலுக்கமைய அதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**02. பரீட்சை நடைமுறை**

(அ) இப்பரீட்சை 02 வினாத்தாள்களைக் கொண்டதாக இருப்பதுடன் ஒவ்வொரு வினாத்தாளுக்குமான பாட விதானம் இலக்கம் 03 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) பாட இலக்கம் 01 முதல் 02 வரை ஒவ்வொரு பாடத்திற்கும் 100 புள்ளிகள் வீதம் வழங்கப்படுவதுடன், ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்காக குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) இப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(ஈ) இப் பரீட்சைக்குரிய இரண்டு (02) வினாத்தாள்களுக்கும் ஒரே தடவையில் அல்லது பல தடவைகளில் தோற்றி சித்தியடைய முடியும்.

(உ) பரீட்சைக் கட்டணம்:

முதலாவது தடவையாக முழுப் பரீட்சைக்கு அல்லது ஒரு பகுதிக்கு மாத்திரம் தோற்றும்போது பரீட்சைக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படும். முதலாவது தடவை அல்லாதவிடத்து கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் பரீட்சைக் கட்டணம் அறவிடப்படும்.

முழுப் பரீட்சைக்கு ரூ.500.00
ஒரு பாடத்திற்கு ரூ.200.00

பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13இற்கு வரவு வைக்கப்பட்டு நாட்டின் எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திற்கு / உப அஞ்சல் அலுவலகத்திற்கு அல்லது மாவட்ட / பிரதேச செயலகத்திற்கு பணமாகச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டை அதன் ஒரு ஓரம் மாத்திரம் ஒட்டப்படும் வகையில் விண்ணப்பப் படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லையென்பதுடன், எக்காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணங்கள் மீளளிக்கப் படவோ அல்லது வேறோரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

**03. வினாத்தாள் மற்றும் அவற்றுக்கான பாடவிதானம் :-**

***முதலாவது வினாத்தாள் (காலம் 03 மணித்தியாலம்)***

(1) சட்டம் மற்றும் முகாமைத்துவம் (பாட இலக்கம்- 01)

I. **சட்டம்**

- சட்டம் பற்றிய வரைவிலக்கணம்
- இலங்கையின் சட்ட அமைப்பு
- இலங்கையின் நீதிமன்ற அமைப்பு
- கம்பனிகளை பதிவு செய்தல்
- வர்த்தகப் பெயர்களை பதிவு செய்தல்
- காப்புரிமைப் பத்திரம் (பேட்டன்ட் அனுமதிப்பத்திரம்)
- வருமான வரி
- தொழிலாளர் சட்ட ஒழுங்கு விதிகள்
- சுற்றாடல் (சூழல்) சார்ந்த சட்டங்கள்
- நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
- ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்
- உள்ளூராட்சி நிறுவனங்கள் ஊடாக விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகள்

II. **முகாமைத்துவம்**

- முகாமைத்துவம் பற்றிய அறிமுகம்
- முகாமையாளர்களின் பணிகள் மற்றும் திறமைகள்
- திட்டமிடல் செயற்பாடுகள் மற்றும் நிறுவன மட்டங்களை (நிலைகளை) ஏற்படுத்தல்.
- நிறுவன அமைப்பு
- செயற்திறன் (செயலாற்றுகை) மதிப்பீடு
- ஊக்குவிப்பு
- தலைமைத்துவம்
- தொடர்பாடல்
- தீர்மானம் எடுத்தல்
- உற்பத்தித்திறன் மற்றும் உற்பத்தித்திறன் வட்டங்கள்
- முகாமைத்துவ நெறிமுறைகள் மற்றும் பொறுப்புக்கள்
- வங்கி முறைமைகள்
- காப்புறுதி

***இரண்டாவது வினாத்தாள் (காலம் 03 மணித்தியாலம்)***

(2) தகவல் தொழில்நுட்பம் தொடர்பான ஆற்றல் (பாட இலக்கம்- 02)

i. தகவல் தொழில்நுட்பம் பற்றிய அடிப்படை எண்ணக்கருக்கள்
ii. வின்டோஸ் செயற்பாடுகள் தொகுதி

iii. கோப்புக்கள் தொடர்பான முகாமைத்துவம்

iv. இணையத்தளம்

v. மின்னஞ்சல் (ஈமெயில்)

**04. விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இந்த அறிவித்தலில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப் படிவத்தை ஏ4(A4) அளவிலான தாளில் இரு பக்கத்தையும் பயன்படுத்தித் தயாரித்துக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் இல. 1 முதல் 3 வரையிலான பகுதிகள் முதலாம் பக்கத்தில் உள்ளடங்கும் வகையிலும் மீதிப் பகுதிகள் இரண்டாம் பக்கத்தில் உள்ளடங்கும் வகையிலும் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். தமது கையெழுத்தினாலேயே அவற்றுக்கான தகவல்களை தெளிவாக பூரணப்படுத்தல் வேண்டும். விண்ணப்பமானது பரீட்சைக்கான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிவிண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படவேண்டியிருப்பதுடன், அவ்வாறல்லாத விண்ணப்பங்கள் மற்றும் முழுமை பெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். (பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதியை வைத்திருத்தல் பயனுடையதாக இருக்கும்.) விண்ணப்பப்படிவத்தினை தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2019.04.22 ஆகும். உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தை திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத் தபாலில் 2019.04.22 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள்) கிளை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
த.பெ. இல. 1503,
கொழும்பு.

(இ) விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழில் முயற்சிகள் அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்களின் இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை 2018(2019)" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள் வெளியிடப்பட்டவுடன் உடனடியாக அது பற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் மற்றும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அறிவித்தல் விடுக்கப்படும். அறிவித்தல் விடுக்கப்பட்டு 02 அல்லது 03 நாட்கள் கடந்ததன் பின்னரும் தமது அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அது சம்பந்தமாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளையுடன் தொடர்புகொண்டு வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரி, தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், முகவரி மற்றும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வாழ்பவராயின், குறிப்பிட்ட விபரங்களுடன் தொலைநகல் (பெக்ஸ்) ஊடாக பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் பிரதியொன்றை துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில் விண்ணப்பதாரியின் தொலைநகல் (பெக்ஸ்) இலக்கம் குறிப்பிடப்பட்ட கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்திற்கு அனுப்பிவைத்தல் பொருத்தமானதாகும்.(அவ்வாறு தொடர்புகொண்டு வினவும்போது தேவையானபோது முன்வைப்பதற்காக தங்களிடம் வைத்திருக்கும் விண்ணப்பப்பத்திரத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய அந்தப் பற்றுச் சீட்டின் பிரதி மற்றும் பதிவுத் தபாலில் அனுப்பியதற்கான பற்றுச் சீட்டு என்பவற்றை தயாராக வைத்திருத்தல் மிகவும் பயன் தரக்கூடியதாக இருக்கும்.)

(உ) விண்ணப்பத்திலும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படும் உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**05. பரீட்சைக்குத் தோற்றுதல் :**

(அ) அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அத்தினத்திற்கு முன்னர், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டுமாயின் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம், விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தலுடன் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்களை வெளியிடுவார். பரீட்சார்த்தியொருவர் தமக்கு குறித்துரைக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி, பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையொப்பம் உறுதி செய்யப்பட்ட தனது அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

**குறிப்பு:-**

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பெற்றுக்கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற முடிவின் அடிப்படையில் விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அத்தினத்திற்கு முன்னர், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டுடன் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்களை வெளியிடுவார்.பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டமையானது பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதக் கூடாது. பரீட்சையை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அந்தச் சட்ட ஒழுங்கு விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக வேண்டியேற்படும்.

(ஆ) பரீட்சார்த்திகளின்ஆளடையாளம் :- தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் சகல பரீட்சார்த்திகளும் தங்களது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆளடையாளத்தை நிரூபிக்கும் ஆவணங்களில் எவையேனும் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

i. தேசிய ஆள் அடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்.

06. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் இருப்பின், அது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கே உண்டு.

07. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் அறிவித்தலில் மொழிப் பிரயோகங்களில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது பொருத்தமின்மை இருப்பின், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே மேலோங்கி நிற்கும்.

வீ.சிவஞானசோதி,
செயலாளர்,
தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு.

இல. 15 /ஏ, அல்பிரட் பிளேஸ்,
கொழும்பு 03,
2019, மாச்சுச 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2018 (2019)**

**Second Efficiency Bar Examination for Entrepreneurs Development Training Officers in the Small Enterprises Development Division of the Ministry of National Policies, Economic Affairs, Resettlement and Rehabilitation, Northern Province Development, Vocational Training & Skills Development and Youth Affairs – 2018 (2019)**

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்:- ☐
சிங்களம் - 2 / தமிழ் - 3 (ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

01. பெயர்:

1.1 முதலெழுத்தை இறுதியிலிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர்:
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்):........................................................................
(உதா.: GUNAWARDANA, M.G.B.S.K.)

1.2 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்): ...................................................

1.3 முழுப் பெயர் (தமிழில்):............................................................

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

02.

2.1 அலுவலக முகவரி:- .................................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
(இந்த முகவரிக்கே பரீட்சை அனுமதிப்பத்திரம் தபாலில் இடப்படும் )

2.2 நிரந்தர முகவரி:- ..................................................................................
(தமிழில்)

2.3 ஆண் /பெண்
(பெண் - 1 ஆண் - 0) ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

2.4 கையடக்கத் தொலைபேசி இல.:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

03. பரீட்சைக்குத் தோற்றும் பாடங்கள்

1 .............................................................. பாட இலக்கம் ☐

2 ............................................................. பாட இலக்கம் ☐

04. பரீட்சைக்குத் தோற்றிய தடவைகள்: .........................................

05. பரீட்சைக் கட்டணம்

i. செலுத்திய கட்டணம் : ரூ. .............   ii. செலுத்திய அலுவலகம் : .......................

iii. செலுத்திய திகதி : .......................   iv. பற்றுச் சீட்டு இல. : .......................

| |
|---|
| வர்த்தமானி அறிவித்தலில் இல.02 (உ) பந்திக்கமைய, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தால் அந்தப் பற்றுச்சீட்டை இங்கு ஒட்டிவிடவும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருத்தல் அத்தியாவசியமாகும். |

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையென உறுதிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு நான் உடன்படுகின்றேன் எனவும் இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

…..................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி : ......................................

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்:**

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி...................................... எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும், அவரால் முன்வைக்கப்பட்டிருக்கும் தகவல்கள் சரியானவை எனவும், குறிப்பிட்ட வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகைமை பெற்றுள்ளார் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன். மேலும், அவர் முதன் முறையாக இந்தப் பரீட்சைக்குத் தோற்றுபவர் எனவும் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளார் எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

.............................................
திகதி :- . .................................................. திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :- ..................................................

பதவி :- ..................................................

முகவரி :- ..................................................
(தயவு செய்து பதவி முத்திரையை இடவும்).

3-1312/2

---

**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

இலங்கை கால்நடை பரிபாலன பாடசாலை நுழைவிற்கான போட்டிப் பரீட்சை - 2019

***2019/2021ஆம் கல்வி ஆண்டின் பொருட்டு கால்நடை வள உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா பாடநெறி (NVQ 5, 6 மட்டத்தை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது).***

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் ஊடாக நடாத்தப்படுகின்ற கால்நடை வள உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பில் உயர் தேசிய டிப்ளோமா பாடநெறியின் பொருட்டு - 2019/ 2021ஆம் கல்வி ஆண்டின் பொருட்டு கரந்தகொல்லை மற்றும் சீப்புக்குளம் இலங்கை கால்நடை பராமரிப்பு பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் 2019, மே மாதம் கண்டியில் நடத்தப்படும். அதன் பொருட்டு விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன. இந்தப் பாடநெறியை பூரணப்படுத்துவதற்கு இலங்கை கால்நடை பராமரிப்பு பாடசாலையில் முழுநேர இருவருட தங்குமிட பயிற்சியின் பின்னர் 06 மாதங்களில் தொழிற் பயிற்சியையும் பெயர் குறிப்பிடப்படுகின்ற இரண்டு நிறுவனங்களில் இருந்து பெற்றுக் கொள்வது கட்டாயமாகும்.

2. **டிப்ளோமா பாடநெறி தொடர்பிலான விபரங்கள் வருமாறு** :

2.1 இப்பாடநெறி வழமையாக ஆங்கில மொழியில் நடாத்தப்படுவதுடன் திருமணமாகாத ஆண், பெண் இருபாலாருக்கும் திறந்து விடப்பட்டுள்ளன.

*2.2* இந்த டிப்ளோமா பாடநெறியானது ஒரு தொழிற் பயிற்சி வேலைத்திட்டமாக அமைவதுடன், அரசாங்கத்தில் தொழில் பெற்றுக்கொள்வதற்கு இத்தொழிற் தகைமைக்கு மேலதிகமாக அப்பதவிக்கு உரிய ஆட்சேர்ப்புச் செயன்முறையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

*2.3* பயிற்சிக் காலத்தின்போது மாணவர்களுக்கு நாளாந்தம் தங்குவதற்கான கொடுப்பனவு வழங்கப்படும். அதேவேளை மேலதிகமாக ஏற்படுகின்ற செலவினை மாணவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

*2.4* சனி, ஞாயிறு போன்ற தினங்களிலும் செயன்முறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அவ்வேளையில் விரிவுரைகளும் நடைபெறுவதால் விடுதிகளில் இருந்து மாணவர்களை அனுப்புவது மாதத்திற்கு ஒரு வார இறுதி நாளில் மாத்திரமாகும்.

*3.* **ஆட்சேர்ப்பிற்கான தகைமைகள் :**

*3.1* (அ) சிங்கள மொழி மற்றும் இலக்கியம்/ தமிழ் மொழி மற்றும் இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் போன்ற பாடங்கள் நான்கிற்கும் கட்டாயமாக திறமைச் சித்தியும், மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களுடன் க.பொ.த.(சா.த.)ப் பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

மற்றும்

க. பொ. த. (உ. த.) ப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பாடங்களை மேற்கொண்டு உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், இரசாயனவியல் போன்ற பாடங்களை ஒரே தடவையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) சிங்கள மொழி மற்றும் இலக்கியம்/ தமிழ் மொழி மற்றும் இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் போன்ற பாடங்கள் நான்கிற்கும் கட்டாயமாக திறமைச் சித்தியும், மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களுடன் க.பொ.த. (சா.த.)ப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

க. பொ. த. (உ. த.) ப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் உயிரியல் விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம், இரசாயனவியல் போன்ற மூன்று பாடங்களையும் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

(இ) சிங்கள மொழி மற்றும் இலக்கியம்/ தமிழ் மொழி மற்றும் இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் போன்ற பாடங்கள் நான்கிற்கும் கட்டாயமாக திறமைச் சித்தியும், மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களுடன் க.பொ.த.(சா.த.)ப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

க. பொ. த. (உ. த.) ப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்துறையின் கீழ் உயிரியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பத்தின் பொருட்டு விஞ்ஞானம் மற்றும் விவசாய விஞ்ஞானம் போன்ற பாடங்களில் ஒரே தடவையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

*3.2* விண்ணப்பக்காரர் 2019, ஏப்பிறல் 22 ஆந் திகதியன்று 17 வயதிற்கு குறையாமலும் 25 வயதினை விஞ்சாமலும் இருத்தல் வேண்டும்.

*3.3* தேவையான கல்வித் தகைமைகளைக் கொண்டிராத மற்றும்/அல்லது உரிய வயதெல்லையை மீறும் விண்ணப்பகாரரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

*3.4* பெறுபேற்றினை எதிர்பார்த்து இருப்போர் விண்ணப்பிக்க வேண்டாம்.

4. **விண்ணப்பங்கள் :**

4.1 இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பக்காரரினால் A4 அளவிலான கடதாசியில் விண்ணப்பம் தயாரிக்க வேண்டும்.

4.2 பரீட்சைக் கட்டணம் ரூபா 150 ஆகும். விண்ணப்பகாரர் அத்தொகையினை "கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்" அவர்களது பேராதனை, 057100179027275 ஆம் இலக்க மக்கள் வங்கிக் கணக்கிற்கு வைப்பிலிட்டு பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும். இப்பரீட்சைக்காக செலுத்தப்படுகின்ற கட்டணத்தை வேறு பரீட்சைக்காக மாற்றம் செய்ய முடியாது. அவ்வாறே எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படவும் மாட்டாது. இப்பரீட்சையின் பொருட்டு வங்கிப் பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் அனுப்பிவைப்பதற்கு தவறும் பட்சத்தில் விண்ணப்பங்கள் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும்.

4.3 விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபாலில் மாத்திரம் 2019, ஏப்பிறல் 22 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர் (மனிதவள அபிவிருத்தி), கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், த. பெ. இலக்கம் 13, பேராதனை" எனும் முகவரிக்கு தபாலிலிடுதல் வேண்டும்.

4.4 விண்ணப்பம் உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "2019/2021 பாடநெறியின் பொருட்டு கால்நடை பரிபாலன பாடசாலைக்கான நுழைவு" எனும் சொற்றொடர் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

4.5 விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ்கள் மற்றும் பிறப்புச்சான்றிதழ் என்பவற்றின் நிழற்படப் பிரதிகள் இணைக்கப்பட்டு இருக்க வேண்டும். வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டு வினவப்பட்டுள்ள சகல தகைமைகளையும் கொண்டிராத முறையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் மற்றும் வினவப்பட்டிருக்கும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்காத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

5. **தெரிவுசெய்யும் முறை :**

5.1 பயிலுநர்கள் தெரிவு செய்யப்படுவது இத்திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற எழுத்துமூல மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

5.2 எழுத்துமூலப் பரீட்சை பின்வரும் இரண்டு வினாப் பத்திரங்களைக் கொண்டமைந்திருக்கும் :-

(i) **கால்நடை வளர்ப்பு -** க. பொ. த. (சா. த.)ப் பரீட்சையின் விவசாயப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கால்நடை வளர்ப்பு தொடர்பான பகுதிகளில் இருந்து தயாரிக்கப்படும் பல்தேர்வு வினாக்களைக் கொண்டு அமைந்து இருக்கும் - (நேரம் : 1 மணித்தியாலம்)

(ii) **பொது அறிவு -** (நேரம் : 1 மணித்தியாலம்)

5.3 எழுத்துமூலப் பரீட்சைக்கு அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அல்லது அவ்விரண்டிற்கும்/அல்லது தோற்றுவதன் பொருட்டு விண்ணப்பகாரருக்கு எவ்வித கொடுப்பனவும் அரசினால் வழங்கப்பட மாட்டாது.

5.4 பரீட்சை நடைபெறுகின்றபோது விண்ணப்பக்காரரால் தமது ஆளடையாளத்தை பரீட்சை மேற்பார்வையாளருக்கு உறுதிப்படுத்துதல் வேண்டும். இதன் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்படும் தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

5.5 விண்ணப்பக்காரர் எவராயினும் ஒருவர் போலி தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவரின், அவரது பரீட்சார்த்தத் தன்மையை உடன் நிறுத்துவதற்கும், அவ்வாறே பயிற்சிப் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதத்திற்குப் பின் பயிற்சியை விட்டு விலகும் மாணவர்கள் தொடர்பில் பயிற்சியின் பொருட்டு அரசினால் அதுவரையில் மேற்கொள்ளப்பட்ட சகல செலவுகளையும் மீள் செலுத்துவதற்கும் நீர் கட்டுப்பட்டுள்ளீர். செலவின் அளவைத் தீர்மானிக்கும் அதிகாரம் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும்.

6. சகல விண்ணப்பக்காரரும் தமது கையொப்பத்தினை அரசாங்கப் பாடசாலை அதிபரினால்/கிராம சேவையாளரினால்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளரினால்/ சட்டத்தரணி/ நொத்தாரிசு/ முப்படை அதிகார உத்தியோகத்தரால், ரூபா 4,98,960 அல்லது அதற்கு மேலான வருடாந்த வேதனம் பெறுகின்ற அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள அல்லது பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையின் பிரதம பிக்கு அல்லது ஏனைய மதஸ்தான பொறுப்பாளர் அல்லது மதக்குழுவினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருவரினால் சான்றுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

7. இந்த வர்த்தமான அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி ஆகியவற்றிற்கு இடையே ஏதாவது பொருந்தாத் தன்மை அல்லது வேறுபாடு நிலவுமிடத்து சிங்கள மொழி மூல அறிவித்தலே செயல்வலுப் பெறும்.

டாக்டர். நிஹால் வெதசிங்க,
கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்.

கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்,
கெட்டம்பே,
பேராதனை.
2019, மாச்சு 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

இலங்கை கால்நடை பரிபாலன பாடசாலை

கால்நடை வள உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா பாடநெறி - 2019/2021

பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழி மூலம் : ☐ சிங்களம் ☐ தமிழ்
(உரிய கூட்டினுள் புள்ளடி இடவும்.)

01. (i) முழுப் பெயர் :
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) (உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

..................................................................................................................

(ii) இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர்: ..............

..................................................................................................................

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) உதாரணம்:GUNAWARDHANA H.M.S.K.

(iii) முழுப் பெயர்: ..................................................................................................
(தமிழில் /சிங்களத்தில்)

2. தபால் முகவரி : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) (அனுமதி அட்டை அனுப்பப்படுவதற்காக):----.

3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4. மாவட்டம் :----.

5. பிரதேச செயலாளர் பிரிவு :----.

6. பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

7. 2019.04.22 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

8. தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

9. பால் : ஆண் ☐ பெண் ☐

(பொருத்தமான இடத்தில் x புள்ளடி அடையாளத்தை இடவும்)

10. விண்ணப்பகாரரது கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சை :

| பாடங்கள் | பெற்ற தரம் | வருடம் | சுட்டெண் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |
| 9. | | | |
| 10. | | | |

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சை :

| பாடங்கள் | பெற்ற தரம் | வருடம் | சுட்டெண் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். பிரதிகள் இன்றி வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)

11. பணம் செலுத்திய வங்கி பற்றுச்சீட்டின் இலக்கம் :----.

(பற்றுச்சீட்டைக் கழறாதவாறு இங்கே ஒட்டவும்.)

12. இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அல்லது நிறுவனம் :----.

13. பாடசாலையில்/நிறுவனத்தில் இருந்து விலகிய திகதி :----.

14. கால்நடை வளர்ப்பில் ஏதாவது அனுபவம் பெற்று இருப்பின் அது தொடர்பான விபரம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்) :----.

15. கிராம அபிவிருத்தி/ விவசாயம்/ சமூக சேவை/ விளையாட்டு தொடர்பான அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்) :----.

16. உறவு முறையல்லாத இருவரது பெயர் முகவரி :

(1) ....................................
........................................
........................................

(2) ....................................
....................................
....................................

விண்ணப்பதாரியின் உறுதியுரை:

எனது அறிவுக்கு எட்டியவரையில் மேலே என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை என்றும், உண்மையானவை என்றும், எனது வழமையான கையொப்பத்தை இட்டு இத்தால் உறுதிமொழிகின்றேன். எனது தெரிவின் பின்னர் இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது பிழையானது எனக் காணப்படுமிடத்து எனது மாணவர் நிலை முடிவுறுத்தப்படுவதுடன், பயிற்சி பெறும் காலத்தில் எனக்காக அரசாங்கத்திற்கு செலவுகள் ஏதும் ஏற்பட்டு இருப்பின், அத்தொகையை நான் செலுத்த வேண்டும் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரது கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன.

1. ........................................................................................
2. ........................................................................................
3. ........................................................................................

**கையொப்பத்தை சான்றுப்படுத்தல்:**

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .............................. என்பவரை நான் நன்கு அறிவேன் எனவும், அவர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும், அவர் மேலுள்ள கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டாரெனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

..............................
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.

சான்றுப்படுத்துபவரது முழுப்பெயர்:----.
பதவி : -----.
முகவரி :-----.
திகதி :-----.

(தயவு செய்து உத்தியோகபூர்வ இலச்சினையை இடவும்).

3-1243

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.